# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய மின்னிதழ்




**தமிழ்த்துறை**

சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

சென்னை 600 099.

044-26863177 9677717455, 9677717456

sokatamilavai2023@gmail.com

sokaikeda2000@gmail.com



**ஜூன் 2024**

**குடில் 7**

**விருந்து 21**

# நற்றமிழ்க்குடில்

**மாணவ இலக்கிய மின்னிதழ்**

## தமிழால் தழைக்கும் உலகு

**குடில் 7 - விருந்து 21 – ஜூன் 2024**

**தமிழ்த்துறை**

**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**

**சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.**

ஆசிரியர் குழு : வி. மாரிகவிதா, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு
அ. உமா மகேஸ்வரி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு
ஏ. ரம்யா, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு
கா. சுவாதி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன், கல்லூரித் தலைவர்
முனைவர் மீரா முருகேசன், கல்லூரி முதல்வர்
முனைவர் கண்மணி சுப்பிரமணியன், கல்லூரித் துணை முதல்வர்
முனைவர் தே. இராணி எலிசபெத், தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

*Blog* : *sokatamil blogspot.com*
*Facebook* : *Soka Tamil Avai*
*Youtube* : *Sokatamilavai*
*E.mail* : *sokatamilavai2023@gmail.com*

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

## குடில் 7

## விருந்து 21

## ஜூன் 2024

# உள்ளே....

தலையங்கம்
அறிவோம் அறிஞரை
மலரே
பழமொழி நுண்பொருள்
நூல் அறிமுகம்
அறிவியல் செய்திகள்
விடுகதைகள்
பொன்மொழிகள்
கடித இலக்கியம்
சிறுகதை
பண்டிகை வரலாறு
சொல் விளையாட்டு
*கவிதைகள்*
*தூரிகைத் தூரல்*
*துறை நிகழ்வுகள்*

# தலையங்கம்

## உலகப் புத்தக நாள்

ஒரு நல்ல புத்தகம் நூறு நல்ல நண்பர்களுக்குச் சமம் என்று டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்கலாம் அவர்கள் குறிப்பிடுகிறார். புத்தக வாசிப்பு என்பது தற்போது குறைந்து வரும் பழக்கமாக இருக்கிறது. வாசிப்பிற்கு நேரத்தைச் செலவிட விரும்புவதில்லை. ஒலி அமைவு மற்றும் காணொளி வழியாகப் பார்க்கவும் கேட்கவுமே விரும்புகின்றனர்.



தேவைகளுக்காகப் பாட நூல்கைளைப் படிப்பதோடு மட்டும் நிற்காமல் பாடத்தைக் கடந்து புத்தகத்தைத் தேடி வாசிக்க வேண்டும். புத்தகங்களை வாசிக்கும் போது புதிய அனுபவங்களைப் பெறுகிறோம். மனதிற்குப் புத்துணர்ச்சியைத் தரும் புத்தக வாசிப்பு. “புத்தகங்கள் கைத் துப்பாக்கிகளை விட வலிமையான ஆயுதம்” என்கிறார் லெனின். புத்தகங்கள் வாழ்கையில் நாம் வெற்றியடைய நமக்கு உதவும் ஆயுதமாகவும், நமக்குத் தடையாக வரும் எதிரிகளை அறிவால் அழிக்கும் சக்தியாகவும் அமைகிறது.

“போதும் என்று நொந்து போய் புது வாழ்வைத் தேடுகிறீர்களா... ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள்” என்கிறார் இங்கர்சால். புத்தகம் மனிதனைப் புதிதாக்குகிறது, மன தைரியத்தை அளிக்கிறது. புத்தகங்களை வாசிக்க நேரம் இல்லை என்பது தான் இன்றைய இளைய தலைமுறையினரின் வாதமாக அமைகிறது. நேருவிடம் இவ்வளவு புத்தகங்களையும் வாசிக்க உங்களுக்கு எப்படி நேரம் இருக்கிறது என்று கேட்டதற்கு, நான் புத்தகம் வாசிப்பதற்காக நேரத்தைக் களவாடுகிறேன் என்றார். வீணாகும் நேரத்தைத் திருடி புத்தகம் வாசிக்கப் பயன்படுத்த வேண்டும்.



“உடலுக்கு உடற்பயிற்சி போலவே வாசிப்பு என்பது நம் மனதிற்கும் அறிவுக்குமான பயிற்சியாகும்” என்று ரிச்சர்ட் ஸ்டீல் கூறுகிறார்.

குழந்தைகள் கருவறையில் இருக்கும் போதே நல்ல நூல்களை வாசிப்பதன் மூலம் குழந்தையின் மூளை வளர்ச்சி அடைகிறது என அறிஞர்கள் கூறுகின்றனர். குழந்தைகள் வளரும் போதே தொலைக்காட்சி, கைபேசிகளைக் கையில் கொடுத்து நாமே அவர்களில் வளர்ச்சியைத் தடை செய்கிறோம். பூக்கள், மரங்கள், விலங்குகள் நிறைந்த வண்ணப் புத்தகங்களைப் புரட்டக் கற்றுக் கொடுக்க வேண்டும். குழந்தைகளுக்கு எழுத்தாற்றல் குறைவாக இருக்கக் காரணம் வாசிப்புத் திறன் குறைவாக இருப்பதே என ஆய்வியில் கண்டறிந்துள்ளனர். புத்தக வாசிப்பு மனதை எழுச்சியுடன் வைத்துக் கொள்ளும், முதுமையில் ஏற்படும் மறதியைத் தள்ளிப் போடும். மூளையைச் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ளும், மன அழுத்தத்தைக் குறைக்கும், வாசிப்பின் போது புதிய தகவல்கள் நம் மனதில் பதிகிறது. இது அறிவை ஊட்டுகிறது, சொல்வளம் பெருகும், பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைகிறது, இங்கிலாந்து சசக்ஸ் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் ஒரு நாளைக்கு 6 நிமிடம் படித்தால், நம் மன அழுத்தம் 68 விழுக்காடு குறையும் என்று கண்டறிந்துள்ளனர்.



1995ஆம் ஆண்டு முதல், யுனெஸ்கோ ஆண்டுதோறும் ஏப்ரல் 23ஆம் நாளை உலகப் புத்தக நாளாக அறிவித்தது. வில்லியம் ஷேக்ஸ்பியர், மிகுவல் டி செர்வாண்டஸ் மற்றும் இன்கா கார்சிலாசோ டி லா வேகா ஆகிய பிரபல

எழுத்தாளர்கள் மரணமடைந்த நாளில்தான் உலகப் புத்தக நாளாக அமைகிறது. உலகெங்கிலும் வாசிப்பை ஊக்குவிப்பதற்கும், புத்தகங்களுக்கான பதிப்புரிமையைப் பாதுகாப்பதற்கும் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

2025 ஆம் ஆண்டு உலகப் புத்தக நாளின் கருபொருள் உங்கள் வழியைப் படியுங்கள் என்பதாகும்.

**ஏ. ரம்யா, இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

## அறிவோம் அறிஞரை

### யுகபாரதி

கவிஞர் யுகபாரதி இவரது இயற்பெயர் பிரேம் குமார். 1976ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறந்தார். அரந்தாங்கியில் இயந்திரப் பொறியியல்



பட்டயப் படிப்பு படித்துள்ளார். நாம் விரும்பிக் கேட்கும் பல திரையிசைப் பாடல்களின் வரிகளுக்குச் சொந்தக்காரர். இவரைப் பற்றி அறியாமலே இவரது பாடல்கள் நம் இதயத்தில் இடம்பிடித்து இருக்கின்றன. இந்த ஆசிரியரைப் பற்றி அறிந்துக் கொள்வோம்.

இவர் தன் 13ஆம் வயதில் ஈழப் போராட்டம் குறித்த ஒரு கவிதையை எழுதினார். அந்தக் கவிதை தமிழர் கண்ணோட்டம் பத்திரிகையில் வெளிவந்தது. இவர் கவிதையைப் படித்த, அவர் அப்பாவின் நண்பர் செல்வகணேசன் இவரை வாழ்த்தி, கவிதை எழுத மரபு முக்கியம் என்பதைக் கற்பித்தார். அடுத்த நான்கு வருடங்கள் அவருடைய வீட்டிலே இருந்து, புத்தகங்களை வாசித்து தன் நேரத்தைப் பயனுள்ளதாகச் செலவழித்தார்.

பள்ளிப் பருவத்திருந்தே கவிதைகள் எழுதி வருகிறார். குடும்ப மலர், வார மலர் போன்ற பத்திரிக்கைகளில் துணுக்குகளாக எழுதி அனுப்புவார். பள்ளிப் படிப்பை முடித்தவுடன் இவரை வீட்டில் உள்ளவர்கள் தமிழ்ப் பட்டப்படிப்பைப் படிக்கும்படிக் கூறினர். இவரோ தமிழ் படித்தால் வேலை கிடைக்காது எனக் கூறி பாலிடெக்னிக் சேர்ந்தார். தொடர்ந்து கவிதைகள் எழுதிக்கொண்டே இருந்தார்.

படிப்பை முடித்தவுடன் அவரின் படைப்புகள் வெளிவந்த இதழ்களின் பக்கங்களைச் சேகரித்து வைத்திருந்த செருகேட்டுடன் பத்திரிக்கைத் துறையில் வேலையில் சேர 1200 ரூபாய் பணத்துடன் அவருக்குத் தமிழ்த் கற்பித்த நண்பன் சரவணனுடன் சென்னைக்கு வந்தார்.

ஐந்து நாட்களில் கொண்டுவந்த பணம் எல்லாம் தீர்ந்து, வீடு திரும்பலாம் என இருந்த நிலையில் கவிஞர் வித்யாசங்கரைச் சந்தித்தார். அவர் ராஜரிஷி பத்திரிக்கையின் ஆசிரியர். அவர் வழியாக ராஜரிஷி பத்திரிக்கையில் பணியாற்றினார். பின்னர் கணையாழியில் பணியாற்றினார்.

இவர் தன்னுடைய கவிதைகளைத் தொகுத்து மனப்பத்தாயம் எனும் நூலை வெளியிட்டார். இரண்டாவது புத்தகம் பஞ்சாரம் இவை இரண்டும் தமிழக அரசு பரிசு பெற்றது. இவருடைய கவிதைகளின் வழியாகவே திரைப்படங்களுக்குப் பாடல் எழுதும் வாய்ப்பு கிடைத்தது.

நாணயம் பத்தி ஒரு கவிதை எழுத முடியுமான்னு லிங்குசாமி கேட்க இவர் எழுதி கொடுத்த கவிதை தான் ஆனந்தம் படத்தில் வந்த 'பல்லாங்குழியின் வட்டம் பார்த்தேன்' பாடல்.

காதல் பிசாசே, மன்மத ராசா, கொஞ்ச நேரம் கொஞ்சும் நேரம் ஆகிய இவரது பாடல்கள் பெரும் பேரும் புகழும் பெற்றவை. கனாக் கண்டேனடி, நீயா பேசியது, தாவணி போட்ட தீபாவளி, கோலிக் குண்டு கண்ணு, கண்ணன் வரும் வேளை, உப்புக் கல்லு கண்ணீருக்கு, வண்ணாரப் பேட்டையில ஒரு வெளவாலு என நாம் வீரும்பும் அனைத்துப் பாடல்களின் ஆசிரியர் இவர் தான்.

இவர் மைனா, ராஜபாட்டை, நீலம், கும்கி ஆகிய திரைப்படங்களிலும் பணியாற்றியுள்ளார். 2001ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பல பாடல்களை எழுதியுள்ளார்.

சிறந்த பாடலாசிரியருக்கான விருதையும் கலைமாமணி விருதையும் பெற்றுள்ளார். இவருடைய படைப்புகளைப் பாராட்டி கோவை பாரதியார் பல்கலைக்கழகம் ஐந்தமிழ் விருதை வழங்கியுள்ளது.

திருப்பூர் தமிழ்ச்சங்க விருது, பிலிம்பேர் விருது, ஸ்டேட்பேங்க் விருது, காசியூர் ரங்கம்மாள் விருது, பெரியார் விருது ஆகிய விருதுகளைப்

பெற்றுள்ளார். ஐந்துமுறை ஆனந்தவிகடன் விருதும், எட்டுமுறை மிர்ச்சி விருதும் பெற்றுள்ளார்.

**வி. மாரிகவிதா, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு**

# மலரே

## பாதிரி

குறிஞ்சிப்பாட்டில் கபிலர் கூறும் 99 வகை மலர்களில் ஒன்று பாதிரி. தேன் கமழ் பாதிரி என்பதற்கு, தேன் மனம் வீசும் பாதிரி மலர் என்று நச்சினார்க்கினியர் விளக்கம் தருகிறார்.







சங்க இலக்கியத்தில் பாதிரிப் பூவின் அமைப்பை யாழின் பத்தரில் ஒட்டிய பச்சைக்கு

உவமிக்கிறார்.

அம்பு, அம்புவாகினி, பாடலம், புன்காலி எனப் பாதிரி மலரை வேறு பெயர்களால் வழங்குவர். இது வேனில் காலத்தில் பூக்கும்.

பாதிரி மலரின் அமைப்பை இலக்கியங்கள் மிக நுட்பமாக விளக்குகின்றன. நீண்ட தண்டில், காம்பிற்கு ஒரு பூவாக 20 பூக்கள் வரை மலரும். இதன் புறவிதழ்கள் மஞ்சள் நிறமானவை.

புறவிதழ்களுக்குள் 5 அகவிதழ்கள் செந்நீல ஊதா நிறமாகக் காணப்படும். இவை அடியில் இணைந்து, புனலாகவும் மேலே மடல்கள் விரிந்துமிருக்கும்.



அகவிதழ்ப் புனல் சற்று வளைந்து காணப்படும். வெள்ளை நிறத்தில் பூக்கும், பருத்த அடிகளை உடையது,

குறுகிய மயிர் நரம்புகள் காணப்படும், கோடைக்காலத்தில் பூக்கும், மாலைக் கட்டி பயன்படுத்துவர், மகளிர் தலையிலும் சூடிக்கொள்வர், பாதிரி மலர் பற்றிய செய்திகள் நற்றிணை, பொரும்பாணாற்றுப்படை, அகநானூறு, பரிபாடல், புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது.

இதனை, “வேனிற் பாதிரிக் கூன்

மலரன்ன” -குறுந் 147:1 என்று குறுந்தொகைப் பாடல் இம்மலர் கோடைக்காலத்தில் பூக்கும், வளைந்து தொங்கும் என்பதை விளக்குகிறது.

இம்மரத்தின் இலை, பூ, விதை, வேர் என அனைத்தும் மருத்துவ குணம் மிக்க மூலிகைகளாக பயன்படுத்தப்படுகின்றன. இதன் வேர் உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும். இதன் பூ தலை வலியைப் போக்கும், இதயத்தின் தசைகள், இரத்தக்குழாய்கள், வால்வுகளை பலப்படுத்தும்.

திருப்பாதிரிப்புலியூர், திருவலிதாயம், திருஅவினாசி, திருவாரூர், ஆரூர் அரநெறி ஆகிய இடங்களில் உள்ள சிவத்தலங்களில் பாதிரி மரம் தலமரமாக விளங்குகிறது.

திருப்பாதிரிப் புலியூரில் வெண்பாதிரியும், திருவாரூரில் செம்பாதிரியும் தலபுராணமாக உள்ளது. பாதிரி பூக்கும் ஆனால் காய்க்காது. சித்திரை மாதம் முழுவதும் பாதிரிப்பூ பூத்திருக்கும்.

பாதிரி மலர் அறிவியல் நோக்கில் மக்களுக்கு நல் மருந்தாகவும், ஆன்மீக வழிபாட்டு மலராகவும், மக்கள் பயன்படுத்தும் மாலையாகவும் பயனபடுத்தப்படுகிறது.

**ரோ. ஷீலா**

**இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு**

## பழமொழி நுண்பொருளுள்

### வர வர மாமியார், கழுதை போல ஆனாளாம்

இந்த9் பழமொழிக்கு நாம் அறிந்த பொருள் அறிவாக நடக்கும் ஒருவர், நாளடைவில் அவருடைய வாழ்க்கை தேய்மானம் அடையும் போது, மாமியாரின் இயல்பு முன்பு இருந்ததை விட மாற்றம் அடையும் போது வர வர மாமியார் கழுதை போல ஆனாளாம் என்று கூறுவர்

**உண்மையான பொருள்**

### வர வர மாமியார், கயிதை போல ஆனாளாம்

கயிதை என்பது ஊமத்தங்காயை குறிக்கும். ஆரம்பத்தில் ஊமத்தம் பூ மென்மையாகப் பார்க்க அழகாக இருக்கும். பின்னர் நாளாக நாளாக அது காயாக மாறி, சுற்றிலும் முள் போல இருக்கும். கொடிய விஷம் கொண்டது. அது



போல மாமியார் பேசுவதும், நடப்பதும், நாளாக நாளாக கயிதை போல அதாவது மென்மையாக இருந்தது முட்களுடன் ஊமத்தங்காயைப் போல மாறும் என்பதே இதன் உண்மையான பொருள் ஆகும்.


**கா. சுவாதி,**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

## நூல் நயம் பாராட்டல்

### மணல் உரையாடல்

மணல் உரையாடல் எனும் கவிஞர் இசாக் அவர்களின் கவிதை நூல், மணல் பாங்கான துபாய் போன்ற வெளியிடங்களுக்குப் பொருள் ஈட்டுவதற்காகத் தன் குடும்பம், பிள்ளைகளை விட்டுப் பிரிந்து செல்லும் மனித இயந்திரங்களின் மன வலிகளையும், உளவியலையும் நம் மனதுடன் ஆழமாக உரையாடுகிறது.




வெளிநாடுகளுக்குச் செல்லும் ஒவ்வொரு தமிழனின் அனைத்து நுணுக்கங்களையும் படம் பிடித்துக் காட்டுவதோடு, நமக்குப் புரிதலையும் ஏற்படுத்துகிறது.

**விடுமுறை நாள்களில் தான்**
**வந்து போகிறது**
**வாழ்க்கை**
**நமக்கு**

மனித வாழ்வு நீண்ட பிரிவால் மங்கிவிட்டது. தன் குடும்பத்தைப் பார்க்கும் போதுதான் வாழ்வதாக உணரப்படுகிறது.

**அந்த மூன்று நாள்கள் பற்றியான**

**அங்கலாய்ப்புகளால்**

**நிரம்பி வழிகிறது பெண்ணுலகம்**

**ஆண்டு முழுவதும் மூன்று நாள்களான**

**சோகத்தை**

**யாரிடம் சொல்லியழுவாள்**

**அவள்**



இப்படி சங்க இலக்கியங்களில் கூறும் பொருள் வயின் பிரிதலை இன்றைய சூழலில் சாதாரணமாக இரணமான வலிகளை நிதர்சன உண்மைகளைக் கவிதை வரிகள் உரையாடுகின்றன.

**நினைவிருக்கிறதா உனக்கு**

**நம் சிரிப்புகளையெல்லாம்**

**அடமானம் வைத்து நெடுநாள்களாகிவிட்டன.**

தங்கள் வீடுகளில் காந்தி சிரிக்கும் ரூபாய் நோட்டுகள் புழங்க வேண்டும் எனத் தங்கள் மகிழ்ச்சியை இழந்து வாழ்கிறார்கள்.

இந்நூல் துபாய் போன்ற வெளிநாடுகளுக்குப் பணத்திற்காகச் செல்ல வேண்டிய கட்டாயம், குடும்பப் பிரிவு, வெளி ஊரில் வேலை பளு, சுதந்திரம் இல்லாத அடிமைத்தன உழைப்பு, சமூகம், வாழ்க்கை மாற்றம் என அனைத்து பரிணாமங்களையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

பிரிவின் வலியைத் தன்னுள் வலிமையாகக் கொண்டுள்ள இந்த மணல் உரையாடல் கவிதை நூல் பிரிவுகளற்ற வாழ்வை வாழ ஆற்றுப்படுத்துவதாக அமைகிறது.

**ரா. சத்யா**

**முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு**

---

## அறிவியல் செய்திகள்

### கணவாய் மீன்

- கடல் வாழ் உயிரினங்களில் ஜெல்லி மீன்களைப் போல சதைகளால் உருவான உயிரினம் கணவாய் மீன். இதன் விலங்கியல் பெயர் செபியா.
- இது இரண்டு பெரிய கண்கள், இரப்பர் போன்ற பற்கள், தலையில் 8 கைகள் வாலில் இரு துடுப்புகளுடன் காணப்படும். இவ்வகை மீன்கள் சுமார் 60 சென்டி மீட்டர் வரை வளரக் கூடியது. சில கணவாய்கள் 13 மீட்டர் வரை வளரக்கூடியவை. இவைச் சிறந்த உணவாகவும் பயன்படுத்தப்படுகிறது.



- கணவாய் மீன்களால் தங்களுக்குப் பின்னால் உள்ள பொருட்களையும் பார்க்க முடியும். குறைந்த வெளிச்சத்தில் துள்ளியமாகப் பார்க்கும் ஆற்றல் உடையவை.
- கணவாய் மீன்களுக்கு மூன்று இதயங்கள் உண்டு.
- கடல் பச்சோந்தி என அழைக்கப்படும் இவை, சூழ்நிலைக்கு ஏற்ப நிறத்தை மாற்றும் ஆற்றலுடையவை.
- 120துக்கும் மேற்பட்ட கணவாய் மீன் வகைகள் உள்ளன.
- எதிரிகளிடமிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள தலைக்குள் இருக்கும் சுரப்பி மூலம் கருப்பான திரவத்தை வெளியேற்றித் தப்பித்துச் செல்லும். அம்பு போன்ற வடிவத்தில் நீந்துவதும் இடத்திற்கு ஏற்ப தன் நிறத்தை மாற்றுவதும் இந்த உயிரினத்தின் சிறப்பு ஆகும்.



- தெற்கு அட்லாண்டிக் பெருங்கடலில் ஒரு பயணத்தின் போது மிகப்பெரிய கணவாய் மீன் கண்டுபிடிக்கப்பட்டது. கடலில் ஒரு பிரமாண்டமான 30

செ.மீ நீளமுள்ள கணவாய் மீன் படம்பிடிக்கப்படுவது இதுவே முதல் முறை. இந்த உயிரினம் 100 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது.



- ❖ சசெக்ஸ் பல்கலைக்கழகக் கல்வியாளர் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு, மார்ச் மாதம் புதிய கடல்வாழ் உயிரினங்களைக் கண்டறியும் 35 நாள் தேடலின் போது இப்புகைப்படம் பதிவு செய்யப்பட்டது.
- ❖ இந்த இனம் 7மீட்டர் நீளம் வரை வளரக்கூடியது.
- ❖ அரை டன் வரை எடையுள்ளதாக இருக்கும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.
- ❖ கடலில் பளிங்குக் கண்ணாடி கணவாய் மீனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**கா. கவிதா**

**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

## விடுகதைகள்

1. அரசன் ஆளாத கோட்டைக்குப் பகல் காவல்காரன் ஒருவன், இரவு காவல்காரன் ஒருவன் அவர்கள் யார்?
2. கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும் தான்?
3. தொப்பென்று விழுந்தான் தொப்பிக் கழன்றான் அவன் யார்?
4. உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு அவன் யார்?
5. பட்டுப்பை நிறைய பவுன் காசு அது என்ன?
6. வேகாத வெயிலில் வெள்ளையப்பன் விளைகிறான். அது என்ன?
7. காவி உடையணியாத கள்ளத் தவசி கரையோரம் கடுந்தவம் செய்கிறான் அவன் யார்?
8. வாராதிருந்து வந்தேன், வந்துவிட்டுப் போனேன், போன பிறகு வந்தேன், இனிப் போனால் வரமாட்டேன் நான் யார்?
9. இனிப்புப் பொட்டலத்துக்கு இரண்டாயிரம் பேர் காவல். அது என்ன?
10. தூக்கத்திற்குத் தூதுவன் நினையாமல் வருவான். அவன் யார்?

**கு.க. மகாலட்சுமி**

**முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு**

## பொன்மொழிகள்

- அதிகாலையில் எழுந்துவிட்டால் தோல்விகள் உங்களைவிட்டுத் தாமாக ஒதுங்கிப் போய்விடும். – அப்துல் கலாம்
- சிந்திப்பதற்கு நேரம் எடுத்துக்காள்ளுங்கள் ஆனால் அதைச் செயல்படுத்தும் போது, அது குறித்துச் சிந்திப்பதை நிறுத்திவிடுங்கள். – நெப்போலியன்
- தோல்வியில் இருந்தே கற்றல் தொடங்குகிறது, முதல் தோல்வியே கல்வியின் ஆரம்பம். – ஜான் ஹெர்சி
- வெற்றி என்பது நாள்தோறும் செய்யப்படும் சிறிய முயற்சிகளின் கூட்டுத்தொகை. – ராபர்ட் கோலியர்
- ஒரு குடிமகன் ஆள்வதற்கு மட்டுமல்ல, ஆளப்படுவதற்கும் தக்கவனாய் இருத்தல் வேண்டும். -அரிஸ்டாட்டில்

**தா. பிரியங்கா**

**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

## கடித இலக்கியம்

என் அன்புத் தோழி திவ்யா,

எப்படி இருக்கிறாய். நான் இங்கு நலமாக உள்ளேன். அம்மா, அப்பா, அண்ணன், அனைவரும் நலமாக உள்ளார்களா? அம்மாவிற்கு உடல்நலக்குறைவு என்று கேள்விப்பட்டேன் தற்போது எப்படி உள்ளார்கள்? உனக்கு இக்கடிதம் எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சிக் கொள்கிறேன்.

சில நாட்களாகவே நாம் அனைவரும் நம் பள்ளியில் ஒன்றாக இருந்த ஞாபகங்கள் அனைத்தும் வந்து வந்துச் செல்கின்றன. உன்னையும் நம் நண்பர்களையும் காண வேண்டும் என்ற ஆசை தோன்றுகிறது. ஆனால் என் சூழ்நிலையோ வர விடாமல் செய்கிறது. என்னை மன்னித்துவிடு என்னால் உன் திருமணத்திற்கு வர முடியவில்லை. இப்போது உனக்குப் பெண் குழந்தை பிறந்துள்ளது என்று கேள்விப்பட்டேன்.



என் மருமகளை அள்ளி அணைக்கக் கரங்கள் ஏங்குகிறது. என்னிடம் உன்னுடைய கைபேசி எண் இல்லை. உன் வீட்டு முகவரியைக் கண்டுபிடித்து உன்னிடம் இக்கடிதத்தின் மூலம் பேசுகிறேன்.

காலங்கள் பல கடந்து குடும்பம் என்னும் கூட்டில் வசிப்பதால் நட்பைத் தேடி வர இயலாத நிலை. பெரியவர்களாக வளராமல் பள்ளி பருவத்திலேயே இருந்திருக்கலாமோ எனத் தோன்றுகிறது. குடும்பத்தில் பல துன்பங்கள் இருந்தாலும் இது போன்ற நினைவுகள் மகிழ்ச்சியைத் தருகிறது.

காலம் நம்மை வெகு தொலைவில் வைத்தாலும் நினைவுகளால் மிக நெருங்கி இருக்கிறோம். அதன் காரணமாகவே இத்தனை நாட்கள் கழித்து உன்னைத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

நீண்ட நாட்கள் மனதிற்குள் புதைந்து இருந்த ஆசை உன்னிடம் பேச வேண்டும் என்பதே.

இனி தொடர்ந்து கடித்தில் பேசி மகிழ்வோம். கால் தடுக்கிவிழும் தூரத்தில் நீ இருந்தாலும் கடலைத் தாண்டுவது போல் எண்ணுகிறேன் என் சூழ்நிலைக் காரணமாக. என் எழுத்துகள் உன்னைத் தேடி விழி நிரம்பியபடி எழுதிய கடிதம் வழி வருகிறது.

உன் பதில் கடிதத்திற்காகக் காத்திருக்கும் உன் அன்பு தோழி.

**மே. சாருமதி**

**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

### சிறுகதை

## கடவுளைக் கண்டேன்

சிறுவன் சுந்தருக்குக் கடவுளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. எப்படி கடவுளைப் பார்ப்பது என அவன் தீவிரமாக யோசித்துக் கொண்டே இருந்தான். அப்பொழுது அவனைப் பார்த்த அவனுடைய பாட்டி

"என்ன கண்ணா யோசிக்கிறாரய்?" என்று கேட்டார்கள்.

அவன் பாட்டியிடம்,

"கடவுள் எப்படி இருப்பார்? பாட்டி, அவர் நமக்கு என்ன வெய்வார்? அவர் எப்படிப்பட்டவர்?"

என கேள்விகளை அடுக்கிக் கொண்டே சென்றான்.

பாட்டியும் சிறுவனுக்குப் புரியும் வகையில்,

"கடவுள், நாம் கேட்பதையெல்லாம் நமக்கு பிடித்ததை எல்லாம் கொடுப்பவர்" என்று கூறிவிட்டார்.

சுந்தருக்கு மறுநாள் பிறந்தநாள், அவனுக்கு அப்பா இல்லை அம்மா மட்டும் தான். அவன் அம்மாவிடம் சென்று,

"அம்மா நான் என் நண்பர்களின் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்குச் சென்று இருக்கிறேன். எனக்கும் அதே போன்று புதிய ஆடைகள், கேக், பரிசு

பொருட்கள் எல்லாம் வேண்டும்” என்று கேட்டான். சுந்தரின் அம்மாவும் சிரித்துக்காண்டே,

“சரிடா செல்லம்” என அவன் தலையைக் கோதி முத்தமிட்டாள்.

சுந்தரின் பிறந்த நாளும் வந்தது. அவன் ஆசைப்பட்ட அனைத்து விதமான பொருட்களும் ஆடைகள், கேக் அனைத்தும் அவனுக்குக் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான். கொண்டாட்டங்கள் முடிந்து சுந்தர் உறங்கச் சென்றான்.

அப்பொழுது அவனுக்கு அவன் பாட்டி சொன்னது நினைவிற்கு வந்தது. யார் நாம் விரும்புகிறதை தருகிறார்களோ அவர் தான் கடவுள் என்பது. என் ஆசைகளை எனக்கு நிறைவேற்றி வைத்தது என் அம்மா தான் அப்போது என் அம்மா தானே எனக்குக் கடவுள் என் யோசித்துக் கொண்டே உறங்கி விட்டான்.

காலை விடிந்ததும் சிரித்துக் கொண்டே அம்மாவிடம் சென்று அவளைக் கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டான். பிறகு சொன்னான்,

“அம்மா நான் கடவுளைப் பார்த்து விட்டேன்” என்று.

அம்மாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுடைய பாட்டி தான் எதாவது சொல்லி இருப்பார்கள் என எண்ணி பாட்டியிடம் கேட்டாயே பாட்டி கடவுளைக் காட்டினார்களா என்றார்.

“இல்லை…இல்லை…” என வேகமாகத் தலையசைத்தான்.

“நீ… கடவுளைப் பார்த்தாயா? எப்படி பார்த்தாய்? எங்கே பார்த்தாய்?” எனக் கேள்விகள் கேட்டாள்.

அவன் ஓடி போய் முகம் பார்க்கும் கண்ணாடியைக் கொண்டு வந்து அவன் அம்மா முகம் தெரியும்படி வைத்தான். அவன், “இதில் என் முகம் தானே தெரிகிறது” என்றான்.

“என்ன கண்ணா சொல்ல வருகிறாய்” என்றாள் அம்மா.

“கண்ணாடியில் இருப்பவரே என் கடவுள்” என்றான்.

அம்மாவிடம் கண்ணாடியைத் திருப்பி, “அம்மா இதில் யார் முகம் தெரிகிறது” என்றான்.

“என்னுடைய முகம் தான்”

“என் கடவுள் நீங்கள் தான் அம்மா” என்றான்.

இப்படி சொன்னவுடன் அவன் அம்மாவிற்குக் கண்கள் குளமாக, ஆனந்தக் கண்ணீர் வடிய அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள். அவன் கடவுளைக் கண்டுபிடித்த மகிழ்ச்சியில் நண்பர்களுடன் விளையாட சென்றுவிட்டான்.

நமக்கு வேண்டுவதை எல்லாம் கொடுப்பவர் கடவுள் என்றாள் தாய். இந்த உலகத்தில் நம் சிறு வயது முதல் நமக்கு வேண்டிய அனைத்தையும் நாம் கேட்காமலேயே செய்வது நம் தாய் மட்டும் தான். தாயின் வடிவில் சுந்தர் கடவுளைக் கண்டான்.

**ர. வினோதினி**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

## பண்டிகை வரலாறு

### சித்திரைத் திருவிழா

மதுரையில் நடைபெறும் சித்திரைத் திருவிழா, மீனாட்சி திருக்கல்யாணம் அல்லது மீனாட்சி கல்யாணம் என்று அழைக்கப்படுகிறது. இந்தத் திருவிழா ஏப்ரல் தொடக்கத்தில் தமிழ் மாதமான சித்திரையில் கொண்டாடப்படுகிறது. சாதிமத வேறுபாடின்றி 15 நாட்கள் கொண்டாடப்படுகிறது.



மீனாட்சி மற்றும் சுந்தரேஸ்வரரின் தெய்வீகத் திருமணத்தை மீண்டும் நினைவுகூரும் ஒரு பிரமாண்டமான பிறந்தநாள் கொண்டாட்டமாகும். வாரக்கணக்கில் நடைபெறும் இந்த விழாவில் வண்ணமயமான ஊர்வலங்கள், கோயில் சடங்குகள் மற்றும் துடிப்பான தெரு நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

மதுரை மாநகருக்குக் கோயில் நகரம், தூங்கா நகரம், கூடல் நகரம் எனப் பல்வேறு பெயர்கள் உள்ளன. மதுரையின் மிகப்பெரிய அடையாளம் மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில். இது மதுரையின் நடுவே அமைந்துள்ளது.

இந்தச் சிவன் கோயிலின் மூலவர் சுந்தரேசுவரர் மற்றும் மீனாட்சி அம்மை ஆவார்.



கொடியேற்றம், மகுடமுழுக்கு, வருகை, மீனாட்சி திருக்கல்யாணம், தேரோட்டம், எதிர் சேவை, அதனைத் தொடர்ந்து வைகை ஆற்றில் அழகர் எழுந்தருளும் நிகழ்வு தேவேந்திரப் பூசையுடன் விழா நிறைவடையும்.

திருவிழா நடைபெறும் நாட்களில் காலை, மாலை என இருவேளையும் மீனாட்சி-சுந்தரேசுவரர் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி மாசி வீதிகளில் வலம் வருவர்.

சித்திரைத் திருவிழா சைவம், வைணவ மதத்தை இணைத்து உருவாக்கப்பட்ட திருவிழா.

**ந. வினோதா**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

## சொல் விளையாட்டு

கட்டத்தில் மறைந்துள்ள தமிழர்களின் மறைந்து வரும் தோல் இசைக்கருவிகளைக் கண்டறிக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உ | டு | மி | கொ | ண் | டை | ஆ | செ |
| டு | று | ச | டு | கி | கு | மு | த |
| கி | உ | மி | கொ | ளி | ந | ழ | ட் |
| ங் | ய | ப | றை | கை | ப | வு | டு |
| ட | ழ | உ | க் | கி | டை | ண் | செ |
| கோ | கொ | டு | கொ | ட் | டி | தா | ண் |
| ங் | உ | மி | ட | மு | பை | மி | லை |

**தா. பிரியங்கா**

**இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு**

**விடுகதைகள் - விடைகள்**

1. சூரியன், சந்திரன்
2. பனம் பழம்
3. மிளகாய்
4. கொக்கு
5. தேன் கூடு
6. வெங்காயம்
7. பாய்
8. உப்பு
9. பல்
10. கொட்டாவி

## கவிதைகள்

### கடவுள்

பிச்சை ஏற்றுப் பெற்றேன்

இப்பிறவி பாத்திரத்தை

பாச பந்தப் பிணைப்பில்

பகை சண்டையில் சிக்கி

பிச்சை எடுத்த நோக்கயே மறந்தேன்

கரு இருளில் தொடங்கி

புவி இருளுக்குள்ளே வாழ்வு முடிந்தாலும்

வெளிச்சமாகிய உன்னை நினைக்க மறந்தேன்

வாழ்வின் நோக்கத்தை மறந்தேன்

மனமுருகி வணங்குகிறேன் மாசில்லா உன்னை

கண்களில் பெருக்கெடுக்கும் நீரின் வழி

**கு. சங்கீதா**

**முதுகலைத்தமிழ் முதலாமாண்டு**

## இயற்கை

வீழும் வெண்ணிற அருவி

வீழ்ந்துவிடாதே என எச்சரித்தது.

உறையும் பனித்துளி

கடினமாய் நிற்காதே என்றது

சூரியனின் ஒளி பாதை காட்டியது

இரவின் நிலவு நிம்மதி தந்தது

பொழியும் மழை என் கண்ணீரில் கலந்தது

வாழ்க்கை மலரவே என நம்பிக்கைத் தந்தது

கடல் வீரம் தந்தது அலைகள் உறவாடியது

அத்தனை அழகும் ரசித்து ரசித்து

இதயம் இதம் கண்டது

வாழ்விற்கு படிப்பினை ஆனது

**செ. பவித்ரா**

**முதுகலைத்தமிழ் முதலாமாண்டு**

**அழகு**

தாமரை முகம், பவள வாய்

முத்துப் பற்கள், மீன் கண்கள்

அன்ன நடை, மென்மை மொழி

வர்ணிக்கப்படாள் பெண்

அவள் அழகுதான்

வீரத்தில் விவேகத்தில்

தைரியத்தில் துணிச்சலில்

அழகு தான்.

**செ. ரூபிகா**

**முதுகலைத் தமிழ் முதலாமாண்டு**

## பெண்

அன்பின் அகச்சொல்லாம் பெண்!

பண்பின் புறச்சொல்லாம் பெண்!

அழகின் அறச்சொல்லாம் பெண்!

கலையின் கலைச்சொல்லாம் பெண்!

துயரின் திரிச் சொல்லாம் பெண்!

துணிவின் திசைச் சொல்லாம் பெண்!

உழைப்பின் உரிச்சொல்லாம் பெண்!

உலகின் உயர் சொல்லாம் பெண்!

**பா. லோகேஸ்வரி**

**முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு**

**தூரிகைத் தூரல்**



**ஷயாரா பானு**

**இளங்கலைப் பொருளாதாரம்**




வர்ஷிதா. வி

இளம் வணிகவியல் இரண்டாமாண்டு



எஸ். ஸ்ரீமகாலட்சுமி

இளம் பொருளாதாரம் மூன்றாமாண்டு



சந்தியா பா

கணினிப் பயன்பாட்டியல் இரண்டாமாண்டு

## துறை நிகழ்வுகள்

### தேசியக் கருத்தரங்கம்

தமிழ்த்துறை சோகா தமிழ்ப்பேரவையில் '**பன்முகப் பார்வையில் கஸ்தூரி ராஜாவின் பாமர இலக்கியம்**' என்ற தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் 30.05.2024 அன்று நடைபெற்றது. திரைப்பட இயக்குநர் திரு. கஸ்தூரிராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். கருத்தரங்கில் ஆய்வுக்கட்டுரைகள் வழங்கிய பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். 44 ஆய்வாளர்கள் ஆய்வுக்கட்டுரைகளை வழங்கினர்.






### சொல் விளையாட்டு விடைகள்

பறை, முழவு, செண்டை, இடக்கை, உறுமி, ஆகுளி, கொடுகொட்டி, கோடங்கி, உடுக்கை.

**முன் பக்க அட்டை – கல்லூரியில் இயற்கையின் வண்ணம் - வானவில்**

**பின்பக்க அட்டை – 2024ஆம் ஆண்டு பட்டம் பெற்ற மாணவியர்**

# நற்றமிழ்க்குடில்
## மாணவ இலக்கிய மின்னிதழ்




**தமிழ்த்துறை**
**சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு**
**சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி**
**சேது பாஸ்கரா நகர் மாதனாங்குப்பம்**
**சென்னை 600 099.**
**044-26863177, 9677717455, 9677717456**
**sokaikeda2000@gmail.com, sokatamilavai2023@gmail.com.**